कामधेनुर्विचिन्त्याह क्षीरमात्रं ददाम्यहम् ।
मुनीनामपि होमार्थं नान्यत्किञ्चिद्ददाम्यहम् ॥ १८

मुनीनामपि देवानां मनुष्याणामभीप्सितम् ।
दातुं शक्तिर्यथा मे स्याद्यतिष्ये तपसा तथा ॥ १९

इति मत्वा गुरुं नत्वा विज्ञाप्य च मनोरथम् ।
आमन्त्र्य तपसे धेनुः निर्गत्य च तदाश्रमात् ॥ २०

विचिन्वत तपस्सिद्धिप्रदं कुत्रेति भूतले ।
आगता दैवयोगेन कावेर्या उत्तरे तटे ॥ २१

अनन्तशयनस्थानं गत्वा विष्णुं प्रणम्य च ।
एतदेव महास्थानं तपस्सिद्धिकरं परम् ॥ २२

अत्रैव चाश्रमं कृत्वा तोषयिष्ये समाधिना ।
अनन्तशयनं विष्णुमनन्तं पुरुषोत्तमम् ॥ २३

आदिमध्यान्तरहितमचिन्त्यं योगिनामपि ।
हरिं भक्तपराधीनमगण्यगुणसागरम् ॥ २४

इति बुध्या विचिन्त्याशु दर्भानास्तीर्य भूतले ।
अग्निं प्रज्वाल्य विधिवत् चतुर्दिक्षु समाहिता ॥ २५

ग्रीष्मकालेऽग्निमध्यस्था वर्षासु भुवि सुस्थिता ।
हेमन्तशिशिरे चैव जलमध्ये गता सति ॥ २६

इत्थं महातपस्तप्तं मुनीनामप्यगोचरम् ।
हृदयाम्बुजमध्ये तु निधाय पुरुषोत्तमम् ॥ २७

...... तृणं त्यक्त्वा जलं त्यक्त्वाथ मारुतम् ।
समानां च गतं पञ्चशतं तस्यास्तपोधनः ॥ २८

गते पञ्चशतेऽब्दानां तपस्यन्त्याः पुरो हरिः ।
वरं प्रदातुमुद्युक्तः कृपया समुपागतः ॥ २९

विनतासुतमारुह्य सपक्षगिरिसन्निभम् ।
कालमेघनिभःश्यामं कमलायतलोचनम् । ३०

श.... .... पितामहपिता विभुः ।
धर्ममानसुशीलानामिव वर्षन्मुखाम्बुदः ॥ ३१

आजगाम हरिस्साक्षात्तस्य धेन्वास्समीपतः ।

श्रीभगवान् —

उत्तिष्ठोत्तिष्ठ हे वत्स प्रीतोऽस्मि तपसा तव ॥ ३२

वरं ददामि भद्रं ते वृणीष्व वरमीप्सितम् ।
इत्युक्तं हरिणा धेनुर्वाक्यं श्रुत्वाऽऽमृतोपमम् ॥ ३३

उन्मील्य चक्षुषी धेनुस्तपसो विरराम ह ।
नारायणं ददर्शाग्रे नलिनासनसेवितम् ॥ ३४

स्निग्धाञ्जनगिरिश्यामदिव्याभरणभूषितम् ।
पीताम्बरधरं देवं प्रसन्नवदनाम्बुजम् ॥ ३५

केयूरालङ्कृतभुजं स्फुरन्मकरकुण्डलम् ।
दधानं सोमसूर्याभे पाञ्चजन्यं सुदर्शने ॥ ३६

तुष्टाव परमप्रीत्या धेनुर्गद्गदया गिरा ।

धेनुः—

ओं नमो विष्णवे तुभ्यं जिष्णवे प्रभविष्णवे ॥ ३७

नमो वेदान्तवेद्याय नमः परममूर्तये ।
नमः पङ्कजनाभाय नमस्सर्वेश्वराय च ॥ ३८

नमो जगन्निवासाय नमो वैकुण्ठवासिने ।
निर्गुणाय नमस्तुभ्यं निष्कलाय नमो नमः ॥ ३९

व्यक्ताव्यक्तस्वरूपाय विश्वरूपाय ते नमः ।
निरञ्जनाय विभवे निर्विकल्पाय ते नमः ॥ ४०

विराट्पुरुषरूपाय स्वराड्रूपाय ते नमः ।
इति स्तुत्वा जगन्नाथं प्रणम्य पुनरुत्थिता ॥ ४१

नेत्राभ्यामश्रुपूर्णाभ्यां पपौ रूपामृतं हरेः ।
श्रीभगवान् —
तुष्टोऽस्मि तपसा पूर्वं स्तोत्रेणैतेन शोभने ॥ ४२

प्रसन्नोऽस्म्यधिकं भद्रे ! ददामि वरमीप्सितम् ।
सूतः —
सुधारससमं वाक्यं तद्विष्णोः परमात्मनः ॥ ४३

श्रुत्वा धेनुर्वसिष्ठस्य वाक्यं पुनरुवाच ह ।
धेनुः —
मयि प्रसन्नो भगवान् यद्यहं पात्रतां गता ॥ ४४

कृपया तव लोकेश वृणोमि वरमुत्तमम् ।
पूर्वं मुनीनां होमार्थं क्षीरमात्रं मयानघ ॥ ४५

दत्तं किमपि नान्यच्च दातुं शक्नोम्यहं प्रभो ।
तव प्रसादात्सर्वेभ्यो याचकेभ्यो मनोरथम् ॥ ४६

दातुं देह्यधिकां शक्तिं मुनीनां वस्तुचिन्तितम् ।
नाम्ना मम पुरी ह्येषा प्रथिता भविता सदा ॥ ४७

तव पादाब्जयुगले सुदृढा भक्तिरस्तु मे ।
आकल्पं मम सन्तानं लोके तिष्ठतु शाश्वतम् ॥ ४८

इति कृत्वा मुनेर्धेनुः ननाम हरि पादयोः ।
कामधेनोर्वचः श्रुत्वा मन्दहासमुखाम्बुजः ॥ ४९

उवाच मधुरं वाक्यं कृपया सह माधवः ।

श्री भगवान् —

उक्तं वसिष्ठधेनोर्यत् त्वया मनसि संस्थितम् ॥ ५०

तत्तथैवास्तु भद्रं ते कामधुग्भव सर्वदा ।
अधिकं तव भक्तेभ्यः प्रार्थितं हृदयं च यत् ॥ ५१

तत्सर्वं देहि सुभगे काम्यं चैव ममाज्ञया ।
अविच्छिन्नास्तु सततं कल्पान्ततव सन्ततिः ॥ ५२

एषा पुरी गोपुरीति तव नाम्ना महीतले ।
प्रथिता भविता नित्यं सर्वसम्पत्प्रदायिनी ॥ ५३

अत्रत्यानां मनुष्याणां गोधनं बहुलं भवेत् ।
एतत् स्तोत्रं त्वया प्रोक्तं यः पठेन्मम सन्निधौ ॥ ५४

सभायां मम भक्तानां ब्राह्मणानां (तथैव च) ।
(सुखमि)श्रं भवेत्तस्य भवेरन्बहुसम्पदः ॥ ५५

अत्रैवांशकला भूत्वा स्थातुमर्हति नित्यशः ।

सूतः —

इत्युक्त्वान्तर्दधे तस्याः पुरतो देवतैस्सह ॥ ५६

मुनिभिस्सह गन्धर्वैरप्सरोभिश्च किन्नरैः ।
धेनुरप्यंशकलया तत्रास्ते हरि सन्निधौ । ५७

तत्र तु धृष्टयस्सर्वा घटोध्न्यश्च निरामयाः ।
लोहिताङ्गास्सु ृङ्गास्युः दर्शकूला .... ॥ ५८

द्विजासहस्रगोदाने यत्फलं तत्फलं लभेत् ।
गोपुर्यावैभवं सर्वं विस्तरेण मयोदितम् ॥ ५९

॥ इति ब्रह्माण्डपुराणे सूतर्षिगणसंवादे गोपुरीमाहात्म्ये धेनुवरप्रदानं नाम चतुर्थोऽध्यायः ॥

॥ पञ्चमोऽध्यायः ॥

ऋषयः—

सूत्रानेकविधं ... . भवद्भिस्संशितव्रतैः ।
सूर्यपुष्करिणीतीरवैभवं प्रोच्यते मया ॥ १

पुराश्वमेधे दक्षस्य वर्तमाने मुनीश्वर ।
(ऋ) षयःसिद्धगन्धर्वा रक्षोरगगणास्तथा ॥ २

देवर्षयो ब्रह्मर्षयो दनुजा दितिजास्तथा ।
आकाशमार्गे तां दृष्ट्वा ... ... दाक्षायणी ॥ ३

गङ्गाधर विरूपाक्ष ! मत्प्राणेश दयानिधे ।
एते विमानगादेवाः ऋषयश्चाप्सरो गणाः ॥ ४

... . दाक्षायण्या च सत्वरम् ।
उवाच परमप्रीतः प्रहस्य च भर्ता प्रियाम ॥ ५

महादेवः—

शृणु वक्ष्यामि हे देवि दक्षस्तव पिता .... ।
... . मामपि त्वामपि स्मरन् ॥ ६

पुरा ब्रह्मसभायां तु प्रणामरहितं शुभे ।
इत्युक्त्वा तेन रुद्रेण .... ॥ ७

इति पृष्टस्तु भगवान्नारदेन महात्मना ।
लज्जावनम्रवदनः प्रत्युवाच मुनीश्वरम् ॥ ८

विष्णुभक्तिप्रधानस्त्वं सर्वं वेत्सि हि तत्वतः ।
तथापि वच्मि मे दन्ताः वीरभद्रेण पातिताः ॥[1] ९

---

1. கந்தபுராணம் By கச்சியப்ப சிவாச்சாரியார் Lifco. காண்டம் - 6, பகுதி - 9, P. No· 432,

दक्षाध्वरगता देवाः वीरभद्रेण पातिताः ।
दन्तोत्पत्तौ उपायं तु यथावद्वक्तुमर्हसि ॥ १०

सूतः—

इत्युक्त्वा भानुना तेन सहस्रकिरणेन च ।
उवाच मधुरं वाक्यं अमृतद्रवसन्निभम् ॥ ११

नारदः—

उपायं दन्तसम्पत्तौ विचिन्त्याहं वदामि ते ।
तदा कुरुष्व भद्रं ते ममाज्ञापरिपालकः ॥ १२

कावेर्यामुत्तरतटे स्थलं विष्णुप्रियं शुभम् ।
पुण्यपापहरं नृणां विष्णुस्थलशताधिकम् ॥ १३

अनन्तशयने शेते साक्षान्नारायणः स्वयम् ।
यत्तु तत्तपसां सिद्धिप्रदं मोक्षप्रदं परम् ॥ १४

गोपुरी नाम विख्यातं कामधेनोस्तपस्स्थलम् ।
यत्र धेन्वा स्तुतः श्रीमाननन्तशयनो हरिः ॥ १५

तस्यै वरान् अनेकांश्च स्वाभीष्टान् प्रददौ तदा ।
ध्यात्वा जप्त्वा तपस्तप्त्वा प्रणम्य हरिमव्ययम् ॥ १६

तोषयित्वा च तपसा मन्त्रमुच्चार्य वैष्णवम् ।
उत्पन्नदन्तस्तेजस्वी चरिष्यसि न संशयः ॥ १७

सूतः—

इत्युक्तो निर्गतस्थानात्तस्मात् क्षीराब्धिमभ्यगात् ।
सूर्योऽप्यनन्तशयनस्थानं गत्वा सुनिर्मलम् ॥ १८

अनन्तशयनस्थानं दक्षिणस्यां दिशि द्विजाः ।
खात्वा पुष्करिणीं तत्र गङ्गामावाह्य शोभनाम् ॥ १९

त्रिंशत्त्रिकोटितीर्थानि तत्रावाह्य दिवाकरः ।
तत्तटे चाश्रमं कृत्वा दर्भानास्तीर्य भूतले ॥ २०

स्नात्वा पुष्करिणीतीर्थे त्रिकालं पूज्य केशवम् ।
पर्णाम्बुवातान् मन्त्र्य पादाङ्गुष्टेन भूतलम् ॥ २१

स्पृष्ट्वा चोर्ध्वबाहुस्तपस्तेपे सुदुष्करम् ।
षडक्षरमयं देवं हृदि निक्षिप्य भक्तिमान् ॥ २२

इत्थं तपस्यतस्तस्य गते वर्षसहस्रके ।
अनन्तशयनं ध्यात्वा सहसोत्थाय देवराट् ॥ २३

पक्षिराजं समारुह्य ब्रह्माद्यैस्सुरसत्तमैः ।
संवृतः कृपयाविष्टः प्रादुरासीद्रवेः पुरा ॥ २४

देवदुन्दुभयो नेदुः पुष्पवृष्टिः पपात ह ।
किन्नराश्च जगुर्गीतं ननर्ताप्सरसां गणैः ॥ २५

उन्मील्य विशालाक्षमूर्ध्वबाहुमनिन्दितम् ।
कृशाङ्गं काष्ठवद्भूमौ तिष्ठन्तं हरिरब्रवीत् ॥ २६

साधु ! साधु ! महाभागचरित्रं ते महाद्भुतम् ।
किंत्वमेतत्तपः पूर्वैरशक्यं मुनिदेवतैः ॥ २७

वशीकृतोऽस्मि तपसा सन्तुष्टोऽस्मि तवानघ ।
वरं वृणीष्व मनसा चिन्तितं प्रददामि ते ॥ २८

इत्युक्त्वा मधुरं वाक्यं मेघगम्भीरया गिरा ।
(एवमुक्त्वा) हृषीकेशः पद्मपत्रायतेक्षणः ॥ २९

तस्य तद्वचनं श्रुत्वा मातृवाक्यं स्तनन्धयः ।
क्षुधार्त्तोवातिसन्तुष्टो विवृताक्षो ददर्श ह ॥ ३०

सपक्षं मेरुमारुह्य स्निग्धाञ्जननिभाचलम् ।
समीपमागतमिव ... . ॥ ३१

अतसीपुष्पसङ्काशमिन्द्रनीलसमप्रभम् ।
नीलोत्पलदलश्यामं स्फुरन्मरकतोपमम् ॥ ३२

प्रणिपत्यादिमध्यान्तरहितं पीतवाससम् ।
तुष्टावानन्दनेत्राम्बुवाहः पुलकविग्रहः ॥ ३३

नमोनमस्ते झषरूपधारिणे
(नमोनमस्ते क) मठाभिदायिने ।
नमोनमस्तेऽस्तु वराहरूपिणे
नमोनमस्तेऽस्तु नृसिंहरूपिणे ॥ ३४

नमोनमस्तेऽस्तु बटुप्रभामिने
नमोनमस्ते परशुप्रतापिने ।
नमोनमस्ते रघुनाथभाविने
नमोनमस्ते मुसला(भिधायिने) ॥ ३५

नमोनमस्ते वसुदेवसूनवे
नमोनमस्ते कलिनाशकर्मिणे ।
नमोनमस्ते सकलाघनाशिने
नमोनमस्ते कपिलात्मधारिणे ॥ ३६

नमोनमस्ते ऽद्भुतचारुकर्मणे
नमोनमस्तेऽस्तु (हि) शेषशायिने ।
नमोनमस्तेऽस्तु ....
नमोनमस्ते महतेऽब्जचक्षुषे ॥ २७

॥ इति ब्रह्माण्डपुराणे सूतर्षिगणसंवादे गोपुरीमाहात्म्ये सूर्यतपःफलं नाम पञ्चमोऽध्यायः ॥

॥ षष्ठोऽध्यायः ॥

इति स्तुते द्विजास्तेन सरसीरुहबन्धुना ।
उवाच निखिलाधारः प्राञ्जलिं कर्मसाक्षिणम् ॥ १

तवास्मि तपसा पूर्वं मर्त्याभिः स्तुतिभिः परम् ।
तुष्टोऽहं अधिकं सूर्य ! प्रार्थनीयं किमुच्यताम् ॥ २

इत्युक्त्वा पद्मिनीनाथं चिन्तयन् स्वपराभवम् ।
स्वामिन् ! कमलपत्राक्षं चिन्तितं व .... द्यम ॥ ३

पातयामास मे दन्तान् वीरभद्रो महाबलः ।
निस्तेजस्कं ततस्तेन दक्षयज्ञे पराजितम् ॥ ४

उत्पन्नदन्तो मां भूयाः कुरुष्व कृपया प्रभो ।
पूर्वस्मादधिकं तेजो ममास्तु कृपया तव ॥ ५

एषा पुष्करिणी नाम स्वा ... . मम ।
श्रुत्वा सूर्यस्य वचनं हृष्टात्मा हीनवर्चसम् ॥ ६

तमुवाच .... तपस्याकर्शितं हरिः ।
यद्यत्पृष्टं त्वया साधो तत्तत्सर्वं तथास्तु ते ॥ ७

प्ररोहन्तु पुनर्दन्ताः पूर्ववत्तीर्थवर्णिनः ।
तेजसाधिक स .... तत्र मण्डले ॥ ८

सूर्यपुष्करिणी नाम्ना प्रथिता भविता भुवि ।
सूर्यपुष्करिणीतीरे वसुनित्यं गवां शतः ॥ ९

पश्चिमाभिमुखो भूत्वा पूजितो देवमानुषैः ।

सूतः—

इत्युक्त्वा निमेषैस्सार्धं तत्रैवान्तर्दधे प्रभुः ॥ १०

(अद्य)प्रभृति लक्ष्मीश सूर्यमण्डलसंस्थितः ।
अन्वतिष्ठत्प्रभां (कोटि) दीप्तभानुर्दिवाकरम् ॥ ११

देहांशकलयाविष्टः सूर्यपुष्करिणीतटे ।
आस्तीर्या हि महामूर्तिः पूर्वभागेस्थितःप्रभुः ॥ १२

तत्तीर्थरक्षणं नित्यं .... स्तुमान् ।
दक्षिणं तीरमाश्रित्य गणेशोऽवति नित्यशः ॥ १३

आश्रित्य पश्चिमं तीरं सुब्रह्मण्योऽवति ध्रुवम् ।
उत्तरं तीरमाश्रित्य रक्षति क्षेत्रपालकः ॥ १४

सूर्यपुष्करिणीतीर्थसदृशं न हि भूतले ।
याः पुष्करिण्यो भूभागे .... श्रयाः ॥ १५

तासां गुणशताधिक्यात्सूर्यपुष्करिणी शुभा ।
दर्शनस्पर्शनस्नानवीक्षणध्यानजल्पनैः ॥ १६

ब्रह्महत्यादि पापानां सद्यक्षयकरी तथा ।
मित्रद्रोही कृतघ्नश्च भ्रूणहा गुरुतल्पगः ॥ १७

स्ना .... शय: ।
सूर्यपुष्करिणीतीर्थे स्नात्वोच्चार्य षडक्षरान् ॥ १८

क्षेत्रपिण्डं प्रदास्यत्र स पितॄनुद्धरिष्यति ।
सूर्यपुष्करिणीतीर्थे मृतानामस्थिनिक्षिपेत् ॥ १९

ते सर्वे पापनिर्मुक्ताः (प्रयान्ति परमाङ्गतिम् ।
सूर्य)पुष्करिणीतोयं स्पृष्ट्वा यत्र ववौ मरुत् ॥ २०

तत्रत्यास्तन्ममरुद्योगाद्गच्छेयुः परमं पदम् ।
व्यतीपातेत्वमायां च ग्रहणे चन्द्रसूर्ययोः ॥ २१

ये स्नान्ति मनुजास्तेषां गङ्गास्नानफलं लभेत् ।
सूर्यपुष्क(रिणीतोये मा)घस्नानं करोति यः ॥ २२

प्रयागतीर्थे माघानां सहस्रफलमाप्नुयात् ।
सूर्यपुष्करिणीतीर्थे यःस्नात्वा हरिवासरे ॥ २३

उपोष्यैकादशीमेकामुषित्वा गोपुरिस्थले ।
द्वादशीमनतिक्रम्य पारणां कुरु (ते च यः) ॥ २४

(सः) शीघ्रमवाप्नोति तद्विष्णोः परमं पदम् ।
कृत्तिकामासि कार्तिक्यां पौर्णिमायां द्विजोत्तमाः ॥ २५

ये स्नान्ति मनुजास्तेषां स्वर्गवासः प्रकल्प्यते ।
सूर्यपुष्करिणीतीर्थे कृत्तिकाभानुवासरे ॥ २६

स्नानं (कुर्वन्ति हि) तेषां करस्थास्सर्वसिद्धयः ।
सूर्यपुष्करिणीतीर्थे श्रावण्यां भानुवासरे ॥ २७

यः स्नाति पापनिर्मुक्तः सूर्यसायुज्यमाप्नुयात् ।
पुरा कारणवैकुण्ठे भगवान्पुरुषोत्तमः ॥ २८

ब्रह्मरुद्रादि देवानामिद .... ।
शृणुध्वं ब्रह्मरुद्राद्या देवाश्च परमर्षयः ॥ २९

मम क्षेत्राणि पुण्याणि बहूनि धरणीतले ।
दिव्यान्यपि च सैद्धानि मानुषानि तथैव च ॥ ३०

स्वयंव्यक्तान्यपि तथा सन्ति तानि वदामि वः ।
ते ... ... पकानां यथोचितम् ॥ ३१

मम रूपं विभज्याथ निवसामि यथा सुखम् ।
अष्टोत्तरशतानां तु क्षेत्राण्युत्तमानि च ॥ ३२

स्वयंव्यक्तानि चाष्टौ मे क्षेत्राणि विविधानि च ।
परिहृत्य च तान्यष्टौ स्वयंव्य(क्तस्थलेषु हि) ॥ ३३

तेषां तु भुवि वि(ख्याता कावेर्या उत्तरेतटे ।
अनन्तशयनो भूत्वा गोपुर्यां निवसाम्यहम् ॥ ३४

स्वयंव्यक्तस्थलसमा गोपुरी पापनाशिनी ।
तामारोप्य तुलामेकामेकोनशतमेकदा ॥ ३५

समानोऽप्यतुलामेकां .... भवेत् ।
तस्मिन्क्षेत्रे महामन्त्रं षडक्षरमितिस्मृतम् ॥ ३६

"ओं नमो विष्णवे" इति सर्षिःछन्दोधिदैवतम् ।
सूर्यपुष्करिणीतीरे सन्निधौ शेषशायिनः ॥ ३७

दशवारं प्रजप्तं चेत्सहस्रफलमाप्नुयात् ।
सहस्रवारं जप्तं चेत् (लक्षसंख्या) फलं भवेत् ॥ ३८

सर्वक्षेत्रे च तत्क्षेत्रं मम प्रियतमं मतम् ।
इति कारणवैकुण्ठनाथेन कथितं पुरा ॥ ३९

श्रुत्वा ब्रह्मादयो देवा गोपुरीं समुपागमन् ।
सूर्यपुष्करिणीतीर्थे स्नात्वा नत्वा जनार्दनम् ॥ ४०

(मनुष्य) रूपास्ते सर्वे सेवन्तेऽद्यापि भक्तितः ।
तस्माद्भूमौ तु सर्वत्र स्थलानामुत्तमोत्तमम् । ४१

तस्य क्षेत्रस्य महिमा मया वक्तुं न शक्यते ।
आपत्सहायो भगवान् आस्ते यत्र यथानिधिः ॥ ४२

क्षेत्रा ... . क्षेत्रेभ्योऽधिकवैभवात् ।
तस्मात्सर्वप्रयत्नेन यूयं गत्वा च गोपुरीम् ॥ ४३

सूर्यपुष्करिणीतीर्थे स्नात्वा नत्वा दयानिधिम् ।
सम्पूज्यापत्सहायाख्यमनन्तशयनं हरिम् ॥ ४४

लभध्वं ईप्सितं ... ... ॥ ४५

॥ इति ब्रह्माण्डपुराणे सूतर्षिगणसंवादे गोपुरीमाहात्म्ये सूर्यपुष्करिणी वैभवं नाम षष्ठोऽध्यायः ॥

ஸ்ரீ:

லக்ஷ்மீபுர மாஹாத்மியம்

(தமிழாக்கப்பகுதி)

நாம் நம்முடைய செயல்களனைத்தும் இடையூறின்றி நல்லவிதமாக முடிய, வெண்பட்டாடை உடுத்தியவரும், திங்களைப் போல் ஒளிருபவரும், தெளிவான முகத்துடன் விளங்குபவரும் ஆன விஷ்ணுவை (எங்கும் பரந்துள்ளான எம்பெருமானை) வணங்க வேண்டும்.

சூத முநிவர்,

''லக்ஷ்மீபுரம்'' எனப்படும் தலத்தினைப் பற்றியும் லக்ஷ்மீபுரீசனான அத்தலத்துறை நாதனைக் குறித்தும் கூற உள்ளேன். முநிவர்களாகிய தாங்கள் அதைக் கவனத்துடன் கேட்பீர்களாக. அந்த தலத்தின் பெருமையைக் கேட்டால் அனைத்து பாபங்களிலிருந்தும் விடுபடலாம் நீண்ட ஆயுளும், பிணியற்ற வாழ்க்கையும் கிட்டும்.

இந்த மாஹாத்மியத்தினை விஷ்ணு பஞ்சக தினம் (மாதத்தின் இரு ஏகாதசிகள், திருவோணம், பௌர்ணமி, அமாவாஸ்யை) மாதப்பிறப்பு, ஹரிவாஸரம் (ஏகாதசி) ஆகிய நன்னாட்களில் லக்ஷ்மீபுரீசரின் சந்நிதானத்தில் படித்தால் அனைத்துச் செல்வங்களும் கிட்டும். இதனைக் கேட்பவர்களுக்கும், போதிப்பவர்களுக்கும் அத்தலத்துறை எம்பெருமானான லக்ஷ்மீநாராயணன் ஞானஸௌபாக்ய ஸித்தியை அளிப்பாரென்பதில் ஐயமில்லை.

உலகில் விஷ்ணுவின் ஸ்தானங்கள்[1] பல இருப்பினும் அவற்றுள் சிறந்தது லக்ஷ்மீபுரம் எனப்படும் இந்த திருத்தலம். இது ஸஹ்யநதியெனப்படும் காவிரியாற்றின் வடக்கிலும், நாபுரத்திற்குத் (கொள்ளிடத்திற்கு — விளக்கம் பிற்சேர்க்கை II, 4 : 4) தெற்கிலும், லக்ஷ்மீபிராட்டியால் நிருமாணிக்கப் பெற்றதும், தாளவநேசரின் (திருப்பனந்தாள்) திருக்கோயிலுக்கு ஈசான்யத்தில்

---

1. முதல் பிற்சேர்க்கையில் காண்க.

(வடகிழக்கில்) நாலரை மைல் தூரத்திலும் ([1] திருவெள்ளியங்குடியிலிருந்து வடகிழக்கில் நாற்பத்தெட்டு நிமிட நேரத்தில் செல்லாம்படி உள்ளதும்), கந்துகாபுரம் எனப்படும் பந்தணைநல்லூர் க்ஷேத்திரத்தில் அருள்பாலித்துவரும் ஸ்ரீ பசுபதீச்வரர் மற்றும் ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் ஆகியோர்களின் ஸந்நிதானங்களுக்கு மேற்கில் நாற்பத்தெட்டு நிமிட நேரத்தில் செல்லலாம்படி அமைந்ததும், கிழைக்கடலிலிருந்து மூன்று யோஜனை (இருபத்தேழு மைல்) தூரத்திலும், கும்பகோணம்—பந்தநல்லூர் பஸ் மார்க்கத்தில் "குறிச்சி" என்னும் பெயருடனும் திகழ்கின்றது. இத்தலத்தில் எம்பெருமான் லக்ஷ்மீ தேவியின் தவப்பெருமையால் அவளது அன்பிற்கு உரியவராய், லக்ஷ்மீ நாராயணனாக ஸ்ரீவைகுந்தத்தைவிட்டு பிரம்மா முதலான தேவர்களுடன் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். இத்தலத்தின் வடக்கில் லக்ஷ்மீ தீர்த்தமும் (நாச்சிகுளம்). கிழக்கில் ஸர்வதீர்த்தமும், தென்கிழக்கில் காரு தீர்த்தமும் உள்ளன.[2] அந்தீர்த்தங்களில் நீராடினால் பிரம்மஹத்தி முதலான தோஷங்கள் நீங்கும்.

லக்ஷ்மீபுரம் எனப்படும் அத்தலத்திற்கு மற்றுமோர் பெருமையுண்டு. திரேதையில் ராமபிரான் ராவணனுடன் போர்புரிந்து அவனைக் கொன்ற பிறகு இத்தலத்தின் வழிவந்தார். அப்போழ்து புஷ்பக விமானத்திலிருந்த வாறே ராமபிரானிடம், சீதையால் "கௌசிகனின் வேள்விகாக்க ராஜா தசரதனால் பணிக்கப்பெற்ற தாங்கள் ஸ்ரீசுந்தரவிமானத்துடன் கூடிய இந்த திவ்ய க்ஷேத்திரத்திற்கு எழுந்தருளினீர்கள். அது சமயம் இந்த க்ஷேத்ரம் தாடகையின் பொறுப்பில் ஒரு பெரிய கானகமாகக் காட்சி கொடுத்தது. அதுவே தற்போது பெருநகராக விளங்குகிறது போலும். இதை அறிந்து

---

1. ஆய்ச்சியராழைப்ப வெண்ணெயுண்டொருகால்
   ஆநிரைவளர்ந்த எம்பெருமான்
   பேய்ச்சிபை முலையுண்டிணைமருதிறுத்துப்
   பெருநிலமளந்தவன் கோயில்
   காய்ந்தநீள் கழுகும் கதலியும், தெங்கும் எங்கும்
   மாம்பொழில்களின் நடுவே
   வாய்த்தநீர் பாயும் மண்ணியின் தென்பால்
   திருவெள்ளியங்குடியதுவே. (பெரிய திருமொழி 4-10-1)

   வெள்ளியார் வணங்க விரைந்தருள் செய்வான் திருவெள்ளியங்குடியதுவே
   (பெரிய திருமொழி 4-10-7)

2. "லக்ஷ்மீ தீர்த்தம்" தவிர மற்றவை காணடைப்பதில்லை.

செல்வோம்" என்று கூறியவர்களாய் ராமனும் சீதையும் இத்தலத்திற்குப் பெருமை சேர்க்குமளவில் வருகை தந்தனர். ஆகையால் இத்தலத்தில் அநுமன் பணிவிடையை ஏற்று ஸ்ரீராமன், சீதை, லக்ஷ்மணன் ஆகியோர் அருள்பாலித்து வருகின்றனர். மேலும் இத்தலத்தின் பெருமையை இவ்வளவே என்று என்னாலும் படங்கள் பலவுமுடைப் பாம்பரையனான ஆதிசேஷனே வந்தாலும் கூற இயலாது.

இவ்வாறிருக்க பூலோகத்தில் பிரசித்தமான புரூரவன் என்றோர் பூபதி இருந்தான். அவன் பேரரசனாகவும், மகா பாகவதனாகவும் திகழ்ந்தான். ஒரு சமயம் அவன் தன் துணைவியாருடன் நாற்படைகளோடு வைஷ்ணவ ஆலயங்களில் அருள்பாலித்துவரும் எம்பெருமான்களுக்குப் பணிவிடை புரிய எண்ணியவனாய் சூரிய கிரஹண சமயத்தில் காவேரி சங்கமிக்கும் இடம் சென்று நீராடி துலா புருஷ தானத்தையும் (துலாபுருஷ தானத்திற்கு — சரசுவதி மகால் வெளியிடான கந்துகாபுர மாஹாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது காண்க.) ஈந்து தொடர்ந்து விஷ்ணு சேவையில் ஈடுபட்டார். பின்னர் புண்ணியத்தின் விளைவாய் லக்ஷ்மீபுரத்தை வந்தடைந்தார் அங்கு சுந்தர விமானத்தின் நடுவில் அருள்பாலித்துவரும் மகாபிரபுவைக் கண்டு வணங்கிய அரசன் விமானத்தின் (அதாவது கோயிலின்) வடபால் லக்ஷ்மியினால் ஏற்படுத்தப்பெற்றதும், பத்ம கல்ஹார புஷ்பங்களோடு கூடியதுமான அந்த புண்ய தீர்த்தத்தைக் கண்டு அதில் நீராடி, தானங்களையும் செய்து கிழக்குத் திசையை அடைந்தார். அத்திசையில் உள்ளதும் 66 கோடி தீர்த்தங்களுக்கும் இருப்பிடமானதும், பாபங்களனைத்தையும் போக்கடிப்பதுமான அந்த ஸர்வ தீர்த்தத்தில் நீராடிப்பின் திருக்கோயிலை வலமாகச் சென்று, தென்கிழக்குத் திசையில் உள்ளதும், ஜரத்காரு என்னும் முநிவரால் தோற்றுவிக்கப் பெற்றதுமான காரு தீர்த்தத்தை அடைந்து நீராடி தானங்களையும் செய்தான். அங்கிருந்து கிளம்பி ஸர்வ தீர்த்தத்தின் தெற்கேயுள்ள ஸத்ய(ஸஹ்ய) நதியை அடைந்தான் ஸத்ய லோகத்திலிருந்து தோன்றி அப்பெயருடனே திகழும் அந்த புண்ணிய நதியில் நீராடி ஷோடச மகாதானங்களைச் செய்தான்.

பின்னர், ஸுந்தர விமானத்தில் நடுவே அருள்பாலித்துவரும் லக்ஷ்மீ நாராயணனான மஹாவிஷ்ணுவை முன்போலவே வணங்கி, அத்தலத்தில் ஆலயம் ஏற்படுத்த நினைத்து, ஆயிரக்கணக்கான தங்கத் தூண்களைக் கொண்ட மண்டபங்களையும், விமானம், கோபுரம், திருச்சுற்றுகள் ஆகியவற்றையும், மறுபடி தீர்த்த நிர்மாணமும், ரதம், வாஹநம் ஆகியவற்றோடு திருக்கோயிலையும் நிறுவி, சிறப்பான நகரையும் அங்கே ஏற்படுத்தி தேவேந்திரஸ்தநம்போல் அதை திகழச்செய்து, அனைத்து வருணத்தாரையும் குடியிருக்கச்செய்து, வேதியர்களுக்குப் பல தானங்களையும் அளித்து திருவரங்கத்தை அடைந்து, அவ்வெம்பெருமானிடம் பணியடிமை செய்து

வணங்கி இறுதியில் விஷ்ணுஸாயுஜ்யத்தையும் பெற்றான்'' என்று கூறியவராய் இவ்வத்யாயத்தை நிறைவேற்றுகிறார்.

இத்துடன் பிரம்மாண்ட புராணத்தில் கூறப்பட்டுள்ள லக்ஷ்மீபுரமாகாத்மியத்தில் 130ஆவது அத்யாயம் நிறைவுற்றது.

லக்ஷ்மீபுரக்ஷேத்திரத்தின் பெருமைகளைக் கேட்டறிந்த முனிவர்கள், ''நன்று.. நன்று...'' எனக்கூறியவர்களாய், ''ஜரத்தாரு முனிவர் செய்த செயல் குறித்து எங்களுக்கு விரிவாகக் கூறுங்கள்'' என்று வேண்டினர். அதைக் கேட்ட சூதர், ''நான் அவர் மேற்கொண்ட செயல் பற்றி உங்களுக்கு எடுத்துக் கூறுவேன், நீங்கள் கவனமாகக் கேளுங்கள்'' என்றுரைத்தவராய் 'லக்ஷ்மீபுரம்' எனப்படும் அத்தலத்தில் ஜரத்காரு என்னும் பெயரில் வேதியர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பாகவதராயும், செல்வந்தராயும், சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்றவராயும், முனிவர்களுள் சிறந்தவராயும், வேதவேதாங்கங்களின் கரை கண்டவராயும், சௌனகரின் புதல்வராயும் விஷ்ணு பூஜையில் பெரிதும் நாட்டமுடையவராயும் வாழ்ந்து வந்தார். அவர், ஒரு சமயம் தந்தையை வணங்கி தவம்புரிவதற்காக இமயமலையை அடைந்தார். அங்கு முனிவர்களுடைய ஆச்ரமத்திற்குச் சென்று ஹேமந்தருதுவில் (மார்கழி, தை மாதங்களில்) ஜலத்தின் நடுவிலும், வர்ஷருதுவில் (ஆவணி, புரட்டாசி மாதங்களில்) மழையிலும், க்ரீஷ்மருது காலங்களில் (ஆனி, ஆடி மாதங்களில்) ஐந்து அக்னிகளின் நடுவிலும் இருந்தவராய் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தவம் புரிந்தார். அவரது தவத்தால் மகிழ்ந்த திருமாலும் காட்சி நல்கி, அந்த முனிவரிடம், ''தாங்கள் விருப்பமுள்ள வரத்தை என்னிடம் கேட்டுப்பெறலாம்'' என்றார், திருமாலின் அருள் வாக்கினைச் செவிமடுத்த முனிவர், அந்த எம்பெருமானை, வரதஹஸ்தம், வஜ்ராயுதம் ஆகியவற்றோடும், பிரம்மதேவன், சிவபெருமான், மஹாலக்ஷ்மீ முதலானோர்களுடனும் திகழக்கண்டு வணங்கி ''வைகுண்டநாதனுக்கு வணக்கம், திருமகள் கேள்வனுக்கு வணக்கம், கடலின் நடுவிலிருந்து பூமியை மேலே எடுத்தவனுக்கு வணக்கம், பக்தர்களின் துயரை ஒழிப்பவருக்கு வணக்கம் பசுக்களைக் காக்க கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்தவனுக்கு வணக்கம். சின்மூர்த்தியாயும், எப்போதும் ஆநந்தரூபியாயும் விளங்குபவருக்கு வணக்கம் ராவணனைக்கொன்ற ராமனாகவும், கிருஷ்ணனாகவும் விளங்கும் தேவரீருக்கு வணக்கம், போன்ற பல்வேறு நாமாவளிகளைக் கூறித் தோத்தரித்தார். பின்னர் பகவான் அவருக்கு இஷ்டமான வரத்தை அளித்துவிட்டு வைகுண்டம் சென்றார், ஜரத்காரு முனிவரும் எம்பெருமானைக் கண்ட மகிழ்ச்சியுடன் தன் இல்லத்திற்குத் திரும்பினார்'' என்று கூறியவராய் இவ்வத்யாயத்தை நிறைவேற்றுகிறார்.

இத்துடன் பிரம்மாண்ட புராணத்தில் லக்ஷ்மீபுர மாகாத்மியம் என்ற நூலில் 131 ஆவது அத்யாயம் நிறைவுற்றது.

சென்ற அத்யாயத்தின் வாயிலாக ஜரத்காரு முனிவரின் செய்கையை விளம்பிய சூத முனிவர் தம்முடைய மேனியில் சிறிது வாட்டமுற்றவராய் அதனைக் களைந்து மறுபடியும் இந்த திருத்தலப் பெருமையினைக் கூற ஆரம்பித்தார்.

சூத முனிவர், "இந்த லக்ஷ்மீபதிபுரத்தினைச் சுற்றிலும் ஒரு யோஜனை தூரத்தில் எங்கு வசித்தாலும் அவர்களுக்கு புக்திமுக்தியை அளித்தருளும் க்ஷேத்திரமாக இது திகழ்கின்றது. இதனை அறிந்த முனிவர்கள் பலர் இங்கே தவமியற்றி பாபங்களனைத்திலிருந்தும் விடுபட்டனர். மேலும் அங்குறை கின்ற வேதியர்களுக்கும் ஸம்ஸாரிகளுக்கும். சிரத்தையுடன் தானம் செய்பவர் இன்பங்களையெல்லாம் துய்த்தவராய். அறநெறியினராய், பூமியில் பூமிக்கு பதியாய் விளங்குவார். அங்கு ஓடுகின்ற ஸத்ய நதியில் சூர்யோதயத்திற்கு முன்பாகவே முறைப்படி ஸ்நானம் செய்பவர் ஸர்வ பாபங்களிலிருந்து விடுபடுவர். அனைத்து தீர்த்தங்களினின்றும் பெருமை மிக்க இத்தீர்த்தத்தில் தினமும் அல்லது ஸங்க்ரமணம் (மாதப்பிறப்பு) திருவோணநாள், ஏகாதசி, பௌர்ணமி, அமாவாஸ்யை கிரஹணம் போன்ற நாட்களில் நீராடுபவர் பெறும் பேற்றை ஆயிரம முகங்கள் கொண்ட ஆதிசேஷனாலும் மீதியின்றியே கூற இயலாது. யாரொருவர் இந்த தேவருக்காக மண்டபம் முதலியவற்றை நிறுவுகின்றாரோ அதனால் அவர் அக்ஷயமான பலனைப் பெறுவார். அதோடு மட்டுமின்றி அவர் ஸ்வர்கலோகத்தில் வெகுநாட்கள் பூலோகத்தைக் காட்டிலும் அதிகமான சுகத்தை அனுபவித்துப் பின்னர் பூலோகம் அடைந்து மண்டலாதிபதியாக விளங்குவார். பின்னர் பாகவதராகி விஷ்ணு லோகத்தில் சிறந்து விளங்குவார். பூஜைக்காக நிலமளிப்பவர் இம்மையி லேயே இன்பம் பல துய்த்து இதைக் காட்டிலும் அதிகமான சுகத்தை சுவர்கத் தில் பெற்று மறுபடியும் த்வீபாதிபதியாகி விஷ்ணு ஸாலோக்யத்தைப் பெறுவார். புண்ணிய காலத்தில் தானம் செய்பவர் அக்ஷயமான பலனைப் பெறுவதோடு அறநெறியாளராயும். ராஜாவாயும் விளங்குவார்.

இந்தப் புராணத்தைப் புண்ணிய காலங்களில் படிப்பவர் அந்த லக்ஷ்மீ பதியின் அருளினால் குடும்பம், செல்வம், தான்யம், பிரஜாபிவிருத்தி, பசுக்கள், நெடுங்காலவாழ்வு, புகழ் ஆகியவை மேன்மேலும் வளரப்பெறுவார், அவர் மேற்கூறியவாறு சுகங்களை அனுபவித்து எம்பெருமான் திருவடிகளைப் பரமபக்தியுடன் பூசித்து, புராண ப்ரவசனங்கள் செய்து தேவேந்திரனுக்கு அருகிலிருக்கும் வாய்ப்பினைப் பெறுவார். இந்த க்ஷேத்திரத்தின் மஹிமை களைப் படனம் செய்பவருக்கு தனம். தான்யம், பூமி, வஸ்திரம், அணிகலன்கள் முதலியவற்றைத் தானமாக அளிப்பவர் புத்திரபௌத்திரர்களுடன் பிரம்ம லோகத்தில் சிறந்து விளங்குவார். இத்தலத்தில் அருள்பாலித்துவரும் எம்பெருமானுக்கு விளைநிலத்தைத் தானம் செய்பவர் மூவுலகிற்கும் அதிபதி யாகி அரசராக விளங்குவார், பட்டு முதலானவற்றை அளிப்பவர் சந்திர

லோகத்தில் சிறந்து விளங்குவார். வெள்ளி, தங்கம், ரத்னம் ஆகியவற்றாலான அணிகலன்களைப் பக்தியுடன் இவ்வெம்பெருமானுக்குச் சமர்ப்பிப்பவர் தேவேந்திரபதத்தை அடைந்து இந்திரனோடு கூடி மகிழ்வர். புஷ்பம், கந்தம், மாலை, தூபதீபங்கள் முதலியவற்றை அளித்தால் அவர் அப்ஸர கணங்களுடன் விளையாடி மகிழ்வர். இத்தலத்தெம்பெருமானுக்கு உற்சவம் நடத்திவைத்தால் அவர் மூவுலகிலும் கிடைத்தற்கரிதான இன்பத்தைப் பெறுவர்.

மேலும், வேதியர்களுக்கு எம்பெருமானின் நைவேத்ய பிரஸாதம், பழம், பக்ஷணம், அன்னம், நெய்யிட்டுச் செய்த பாயஸம், உடை ஆகியவற்றை தன் சக்திக்கேற்றவாறு கொடுத்துத் ததியாராதனம் புரிந்தால் அன்னங்களின் (பருக்கைகளின்) எண்ணிக்கையில் ஆயிர வருடங்கள் ஸ்வர்க்கலோகத்தில் சிறந்து விளங்குவார். அவ்வாறு ஸ்வர்கானுபவம் அடைந்த பிறகு, விஷ்ணு ஸாயுஜ்யத்தைப் பெறுவர். மேலும் அந்த க்ஷேத்திரத்தில் அன்னம், வஸ்திரம், கோ, திலம், கிருஹம், தான்யம், கன்யை ஆகியவற்றைத் தானம் வழங்குபவர் விஷ்ணுலோகத்தில் சிறந்து விளங்குவார். இத்தலத்துறைநாதனுக்குப் பிராகாரம், கோபுரம், மண்டபம் ஆகியவற்றை நிறுவுபவர் செல்வம் அடைவதோடு இம்மைப் பயனாகச் சுகத்தை அனுபவித்து, சுவர்கமெய்தி தேவதாகணங்களால் பூஜிக்கப்பெற்றவராய் இந்திரன்போல் மகிழ்ச்சியுறுவார்.

இந்த க்ஷேத்திரத்தினுடைய மாகாத்மியம் மிகவும் விசித்திரமானது. இதனைக் கேட்பவர், எழுதுபவர் ஸர்வேச்வரனின் பாதங்களைப் பூஜிப்பவராகி அந்த லக்ஷ்மிபதியின் அருளால் நீண்ட ஆயுள், விரைவிலேயே செல்வம் ஆகியன கிட்டப்பெறுவார். இவ்வாறு கூறிய முனிவர்களும் தத்தம் சக்திக்கு ஏற்றவாறு வேர்கள், பழங்கள் முதலியவற்றால் இவ்வெம்பெருமானை அர்ச்சித்து மகிழ்வெய்தினர்'' என்று கூறியவராய் இந்த அத்யாயத்தை நிறைவேற்றுகிறார்.

இத்துடன் பிரம்மாண்ட புராணத்தில் கூறப்பெற்ற
லக்ஷ்மீபுரமாகாத்மியத்தின் 132ஆம் அத்யாயம் நிறைவுபெறுவதோடு
லக்ஷ்மீபுரமாகாத்மியமும் முடிவுற்றது.

ஸ்ரீ:

கோபுரீமாஹாத்மியம்

முதல் அத்யாயம்

நைமிஸாரண்யவாஸிகளான முனிவர்கள் புடைசூழ ரோமஹர்ஷண முனிவர் ஒரு சமயம் ஸூதமஹர்ஷியின் ஆச்ரமத்திற்கு வந்தார். ஸூதமுனிவரும், ரோமஹர்ஷணரும் ஒருவரையொருவர் கௌரவித்தவர்களாய் விருந்தினராய் வந்த அனைவருக்கும் ஸூதமுனிவரால் வரவேற்பளித்து அமருவதற்காக இருக்கைகள் அளிக்கப்பெற்றன. வரவேற்பால் உளம் நெகிழ்ந்த முனிவர்களும் தத்தம் இருக்கையைச் சென்றமர்ந்தனர். ஸூதமுனிவரின் ஆச்ரமத்தில் இருந்த முனிவர்கள், "உயர்ந்த அறிவாளியும், புராணங்களை அறிந்தவரும், ஸர்வக்ஞரும், ரோமஹர்ஷணருமான தங்களின் வரவு நல்வரவாகட்டும். தங்களது வருகையால் நாங்கள் பேறுபெற்றோம்" என்று கூறினார்.

ஸூதமுனிவர், "ஸ்வாமிந்! தேவரீரைக்காண ஆவல் கொண்டிருந்த எனக்கு தங்களது வருகையாலும், தங்களுக்குச் செய்யும் பாதஸேவையாலும் தன்யனானேன் (அருள்பெற்றவனானேன்). இன்றே என் பிறவி நற்பிறவியானது என்று கூறியவராய். "ஓ! முநிசிரேஷ்டரே! தங்களது ஆச்ரமத்தில் தவம் புரிகின்ற முனிவர்கள், வேதியர்கள் மற்றும் அங்குள்ளோர் அனைவரும் நலமா? ..." என்று வினவினார். அதற்கு ரோமஹர்ஷணருடன் வந்த முனிவர்கள். "அனைவரும் நலமாக இருப்பதுடன் தங்களுடைய தொடர்பால் மேலும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்று கூறியவர்களாய்,

முன்பொருகால் தாங்கள் வைணவத் தலங்களின் பெருமையையும், ஸூரிய புஷ்கரிணீ எனப்படும் தீர்த்தத்தின் மஹிமையையும் விரிவாக எடுத்து உரைத்தீர்கள், அப்போழ்து காவிரியின் வடகரையில் "கோபுரீ" என்ற பெயரில் வைணத்தலமொன்றுண்டு என்றும், அங்கே பாம்பணையில் திருமால் கண்வளர்ந்தருளுகிறார் என்றும் குறிப்பிட்டீர்கள். அவ்வாறு பாம்பணையில் திருமால் கண்துயிலக் காரணம் என்ன? அவர் கோயில் கொண்டுள்ள க்ஷேத்திரத்திற்கு "கோபுரீ" என்னும் பெயர் எப்படி ஏற்பட்டது? எப்போது ஏற்பட்டது? என்பதையெல்லாம் தாங்கள் எங்களுக்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டும்' என்று வேண்டினார். அதோடு நில்லாமல், "நாங்கள் இதற்கு முன்பாகவே இது குறித்து அறிந்திருந்தோமாகிலும், பதுமத்தைப் பன்முறை அடைந்து தேனைப் பருகிய பங்கிகள் மறுபடியும் அம்மலரையே நாடிச் செல்வதுபோல நாங்களும் மற்றுமொருமுறை "கோபுரீ" எனப்படும் தலத்தின்

பெருமைகளைச் செவிமடுக்க ஆவலாயுள்ளோம்'' என்று சூதமஹர்ஷியிடம் தம்முடைய விருப்பத்தை மறுபடியும் தெரிவித்துக்கொண்டனர். அவர்களது விருப்பத்தைச் செவிமடுத்த சூதமுனிவர்,

ஆச்ரிதர்களை நழுவவிடாமல் காப்பவரும், நீருண்ட மேகம்போல நில நிறத்தோடு திகழ்பவரும், தாமரை இதழ்போன்ற நீண்ட கண்களை உடையவரும், மலைபோல் உருவத்தை உடையவரும், திருமகள் கேள்வனும், ஆதிதேவரும், அழிவற்றவரும், சாந்த மனமுடையவரும், எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவரும், புருஷோத்தமரும், முதல்-நடு-முடிவற்றவரும், பக்தர்களுக்குப் பாரிஜாதம் போன்றவரும், அநந்தாழ்வான்மீது கண் வளர்ந்தருளுபவருமான மஹாவிஷ்ணுவை வணங்குகின்றேன் என்று திருமாலுக்கு வணக்கம் செலுத்திவிட்டுப் பின்னர், ''லோக விசாரத்தையெல்லாம் நன்கறிந்தவர்களான உங்களால் நன்கு கேழ்க்கப்பட்டது. நானும் உங்களது வேண்டுகோளின்படி "கோபுரீ மாஹாத்மியம்'' குறித்து என் மதிக்கெட்டியவண்ணம் விரிவாய் உரைப்பேன்'' எனறும், ''இந்த மாஹாத்மியம் முதன்முதலில் ஸநத்குமாரரால் ப்ருகு முனிவருக்கும், ப்ருகு முனிவரால் வேதவ்யாஸருக்கும், வேதவ்யாஸரால் சூதரான எனக்கும் உபதேசிக்கப்பெற்றது.

இவ்வாறு வழிவழியாய் வந்த ''கோபுரீ மாஹாத்மியம்'' குறித்து உங்களுக்கு மற்றோர் முறை எடுத்துரைப்பேன். ஆயினும் இந்த க்ஷேத்திரத்தின் பெருமைகளை ,ஆயிரம் தலை கொண்ட ஒருவன் நூறு கோடி வருடங்கள் கூறினாலும் அது முற்றுபெறாது, அவ்வளவு சிறப்பு வாய்ந்த இதன் பெருமைகளை பகவத் பக்தி தலையெடுத்தவர்களான உங்களது ஆவலின் பேரில் நான் கூறப் போகிறேன். நீங்களும் கவனமாய்க் கேட்டு மகிழுங்கள்'' என்றார். ''இது தத்துவப் பொருளையுணர்ந்தவர்களால் பெரிதும் பாதுகாப்பாக வைக்கவேண்டியது. பக்தியற்றவர்களுக்கு இதனைக் கூறக்கூடாது. இது பாபங்களனைத்தையும் போக்கவல்லது, அனைத்து ஸித்திகளையும் கொடுத்து மங்களத்தையும் தரவல்லது. மானிடர்களுக்கு ஸகல ஐச்வர்யத்தையும் அளிக்கவல்ல இது கேட்பவர்களுக்கும் செவிக்கினிய செஞ்சொல்லுமாகின்றது. பாபங்களுக்கெல்லாம் எதிரியாய்த் திகழும் இது அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நால்வகைப் புருஷார்த்தங்களையும் அளிக்கின்றது. மேலுமிது பிரம்மஹத்யாதி பாபங்களையும், ஸம்ஸார தாபத்ரத்தையும் போக்கடித்து, நீண்ட ஆயுளையும் புண்ணியத்தையும் நல்குகின்றது'' என்றவாறு தலப்பெருமையினைச் சிறிதே விளம்பிய சூதமுனிவர், ''மேருமலைக்குத் தென்பக்கத்திலும், தக்ஷிண ஸமுத்ரத்திற்கும், இமய மலைக்கும் நடுவிலும் நாவலம் பெரிய தீவினில் விளங்குவதும் பாரதவர்ஷம் என்று அழைக்கப்பெறுகின்றதுமான தேசத்தில் திருத்தலங்கள் ஏராளமாக உள்ளன. அவ்வாறே நீர் நிரம்பிய குளங்கள், குட்டைகள் ஸரோவரங்கள். பெரிய ஆறுகள் முதலியனவும் காணக்கிடைக்கின்றன. மேற்குச் சமுத்திரத்தின்

கரையில் ஸஹ்யம் என்ற ஒரு பெரிய மலை உண்டு. அம்மலையிலிருந்து பெருகியதான ஆறு பாபங்களைப் போக்கடிக்க வல்லது. தக்ஷிணகங்கை என்றழைக்கப்பெறும் அந்நதியின் பிறப்பிடம் தொடங்கி பிரவஹிக்கும் திசையான கிழ்த்திசையின் இருமருங்கிலும் பற்பல சிவ-விஷ்ணு க்ஷேத்திரங்கள் உள்ளன. அவற்றுள் "கோபுரீ" என்ற பெயருடன் காவிரியாற்றின் வடக்குக் கரையில் ஒரு க்ஷேத்திரம் சிறப்புற விளங்குவதோடு, அது திருமாலுக்கு உகப்பாயும் திகழ்கின்றது. எம்பெருமான் அங்கே நாகத்தின்மீது திருக்கண் வளர்ந்தருளுகின்றான். அந்த "கோபுரி"யில் மூன்று இரவுகளோ அல்லது ஓர் இரவோ தங்கி எம்பெருமானை வழிபடுபவரின் பாபங்கள் கழிந்து உயர்கதியடைய அது வழிவகுக்கிறது. இந்த க்ஷேத்திரத்தில் யாரொருவர் தன்னுடைய சக்திக்கேற்ப வெள்ளியையோ, தங்கத்தையோ வேதியர்களுக்குத் தானமாகக் கொடுத்தால் அது பெரிய ஒரு தானப்பயனை அவருக்கு நல்குகின்றது. இங்கு அன்னதானம் செய்தால் பாபங்கள் ஒழிந்து, ஹரிஸாலோக்யமும், ஒரு கோதானம் செய்தால் ஆயிரம் கோதானம் செய்த பலனையும் பெறுவார்கள். பித்ரு பக்தரான ஒருவர் இங்கே வருடதிதி கொடுத்தால் அவரது பித்ருக்கள் அனைவரும் விஷ்ணுலோகமான வைகுண்டத்தில் விளங்குவார்கள். மேலும் இதனை நினைத்தால் வசித்தபயன் உண்டு.

இங்கு ஒரு பிடி அல்லது சிறிது வைக்கோலை பசுமாட்டிற்குக் கொடுத்தால் காமதேநு மகிழ்ச்சியடைந்து நிரம்ப பசுச் செல்வத்தை அளிப்பாள். ஏகாதசி விரதத்தை இத்தலத்தில் மேற்கொண்டால் ஓர் ஆண்டு உபவாஸம் இருந்த பயன் கிட்டும். புண்யகாலங்களில் இவ்வெம்பெருமானைத் தொழுதால் மோட்சம் கிடைக்கும். கோபுரிக்குச் சென்றாலும், அன்னதானம் செய்தாலும் பூமியில் அவர் பேரரசராகி, நினைத்தபடியெல்லாம் சுகத்தை அனுபவித்துப் பிறகு பித்ரு மண்டலம் சென்று, அதனைப் பிளந்து கோடி சூரியனின் ஒளிபோடு விமானமேறி வைகுந்தமடைவார்" என்று கூறியவராய் முதல் அத்யாயத்தை நிறைவேற்றினார்.

இத்துடன் பிரம்மாண்டபுராணத்தில் ஸுதர்ஷிகணஸம்வாதத்தில்
கோபுரீ மாஹாத்மியத்தில் முதலத்யாயம் நிறைவுற்றது.

இரண்டாம் அத்யாயம்

கோபுரீ க்ஷேத்திரத்தின் பெருமைகளை விளம்பிய சூத முனிவரிடம் ரிஷிகள், "பகவத்பக்தரும், ஸர்வக்ஞரும், வியாஸரின் சீடரும், மிகச் சிறந்த அறிவாளியுமான தாங்கள் கோபுரீ க்ஷேத்திரத்தின் நான்கெல்லைகள் குறித்துக் கூறுவீர்களாக" என்று வேண்டினர். அதைக் கேட்ட சூத முனிவர்

இந்த கோபுரீ க்ஷேத்திரத்தின் நான்கெல்லைகளிலும் முறையே தாளீவனம் (திருப்பனந்தாள்), காச்யாரண்யம் (ஆலங்குடி) பிரயாணஸ்தானம் (திருப்பழநம்) விருத்தாசலம் (முதுகுன்றம்) ஆகிய சிவக்ஷேத்திரங்கள் உள்ளன. இந்த நான்கெல்லையினுள் வாழும் புரிகின்ற அனைத்து ஜந்துக்களும் புண்ணியம் செய்தவையே. இந்த க்ஷேத்திரத்தின் வழியாய் வேறெங்காவது சென்றவர்களுக்கும் சுவர்க்கம் கிடைக்கும். வைகாசித் திங்கள் விசாகம் நக்ஷத்திரம் கூடிய பூர்ணிமா திதியில் காலையில் எழுந்து சூரிய புஷ்கரிணி ஜலத்தில் நீராடி, எல்லைகளில் அருள்பாலித்து வரும் எம்பெருமான்களைத் தொழுது, இறுதியில் கோபுரீ க்ஷேத்திரத்தில் அருள்பாலிக்கின்ற புஜங்க சயனனைத் தொழ வேண்டும். பிறகு பிராம்மண போஜனமும் செய்விக்க வேண்டும். இவ்வாறு யாரொருவர் செய்கின்றாரோ அவர் பூமியையே வலம் வந்த பயனைப் பெறுவார். இந்த க்ஷேத்திரத்தின் நான்கெல்லையின் பெருமையினை யுகங்கள் ஆயிரமாயினும் பிரம்மதேவராலும் கூற இயலாது. இந்த நான்கெல்லைகளுக்குள் இருக்கும் நதிகள், தடாகங்கள், நீர்நிலைகள், குட்டைகள் கால்வாய்கள் குளங்கள் யாவும் கங்கைக்குச் சமமானவை. ஆதலால் அந்த தீர்த்தங்களில் மாதப்பிறப்பு, சூரியசந்திர கிரஹணங்கள் ஆகிய புண்யகாலங்களில் நீராடுபவர் கங்கையில் நீராடிய பயனைப் பெறுவார். அப்படியே அங்கு ஒரு வேள்வியைப் புரிந்தாலும் அது கோடிக்கணக்கான வேள்வி செய்த பயனையும், ஒருவருக்கு அங்கே உணவளித்தால் அது ஆயிரம் நபர்களுக்கு உணவு வழங்கிய பயனையும், ஒரு கன்னிகையைத் தானம் செய்தால் அங்கு கோடி கன்னிகாதானம் செய்த பயனையும், பூமிதானத்தை அங்கே செய்தால் சொல்லற்கரிய தானப் பயனையும் அளிக்கும். அந்த க்ஷேத்திரத்தில் தோட்டம் அமைப்பவர் பாரிஜாத மரத்தடியில் தேவலோகப் பெண்டிர்களின் கூட்டத்தில் இருந்து மகிழ்வதோடு பிரம்மலோகம் சென்று பிறகு வைகுண்டத்தை அடைவான். அங்கே தண்ணீர்ப் பந்தல் அமைப்பவர் பிரம்ம லோகத்தில் சிறந்து விளங்குவார்'' என்று கூறியவராய் இரண்டாம் அத்யாயத்தை நிறைவேற்றினார்.

இத்துடன் பிரம்மாண்ட புராணத்தில் சூதர்ஷிகண ஸம்வாதத்தில்
கோபுரீமாஹாத்மியத்தில இரண்டாம் அத்யாயம் நிறைவுற்றது.

மூன்றாம் அத்யாயம்

''கோபுரீ க்ஷேத்திரத்தின் பெருமையோடு, அதன் எல்லைகளையும், நான்கெல்லைகளின் மஹிமைகளையும் கூறியருளிய தாங்கள் இந்த க்ஷேத்திரத்தில் திருமால் ஏன் புஜங்கசயநராகக் காட்சி தருகிறார்? அதற்குக் காரணம் என்ன? என்பதையெல்லாம் அறிய இப்போது ஆவலாய் உள்ளோம்'' என்று ரிஷிகள் தங்களது விருப்பத்தைத் தெரிவித்தனர். அதைக் கேட்ட சூத முனிவர்,

''முன்பொருகால் ரதந்திரகல்பத்தில் பிரளயம் ஏற்பட்டு அது சமயம் பாதாளத்தில் வசிக்கின்றதும், தருமவடிவாயும், அகல விரிந்த படத்துடன் ஸாக்ஷாத் விஷ்ணு ஸ்வரூபமாக விளங்குகின்ற அந்த ஆதிசேஷனை புவியைத் தாங்குமாறு ஸ்ரீ மகாவிஷ்ணுவால் பணிக்கப் பெற்றது.

அப்போது சக்கரப்பாணியான திருமாலுக்கு மெத்தையாகக் கைங்கரியம் புரிய ஆதிசேஷனுக்கு எண்ணம் ஏற்பட்டது. இந்த எண்ணம் பெரிய ஒரு தவத்தை மேற்கொண்டு, அதன் பயனாகவே ஈடேறும் என நினைத்த ஆதிசேஷன், அங்கிருந்து பூலோகத்தில் தவம் ஸித்தியடைய சிறந்த இடம் எது? எனத் தேடியவாறே எம்பெருமானுடைய அருளால் காவிரியின் வடகரையிலமைந்த கோபுரீ க்ஷேத்திரத்தை அடைந்து, அங்கே ஓர் ஆச்ரமத்தையும் நிறுவியது. பிறகு நாற்புறமும் திமுட்டி உணவு வெறுத்து, புலன்களை அடக்கி, பார்வையை சூரியனிடத்தில் செலுத்தி, இதயத்தில், தாமரைக் கண்ணனான திருமாலை நினைந்து, அவ்வக்னி மத்தியில் தவம் புரிந்தது. இவ்விதம் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் கழிந்த பின்னர், ஆதிசேஷனின் தவத்தை மெச்சிய திருமால் மேருமலையிலிருந்து நீருண்ட மேகம் போல் நீலவண்ணனாக, இந்திரன் வில்லைத் தரித்த மேகம் போல் கர்ஜனையுடனும், கருணையுடனும் அனைவரும் வணங்கும்படியாக தாமரைக்கண்ணனாக, சக்கரம், சங்கம், கதை முதலிய ஆயுதங்களுடன் கையில் சார்ங்கம, தாமரை ஆகியவற்றுடன் மிக்க விரைவாகக் கருடப் பறவையின் மீதேறி ஆதிசேஷனின் ஆச்ரமத்திற்குச் சென்று, ஆங்கே தவம் மேற்கொண்டுள்ள ஆதிசேஷனின் முன்பு தோன்றினார். அவ்வாறு தோன்றிய திருமால்,

ஆதிசேஷனே! மிகவும் உடலை வருத்தி வெகு காலமாகப் புரிந்து வந்த உன்னுடைய தவத்தால் மெச்சினேன். வேண்டிய வரங்களைக் கேள்'' என்று கூறினார். அவரது சொல்லைக் கேட்ட அநந்தன், பரபரப்புடன் கண்ணைத் திறந்து கார்மேக வண்ணனாகவும், தாமரைக்கண்ணனாகவும், கருணைக் கடலாகவும், சார்ங்கமெனும் வில்லைத் தரித்தவராகவும், நீருண்ட மேகத்தில் மின்னல் போல் இதயத்தில் லக்ஷ்மீபிராட்டியைத் தரித்தவராகவும் மார்பில் கௌஸ்துபமணி, காதில் குண்டலங்கள், கழுத்தில் கேயூரமணிமாலை காலில் சதங்கை ஆகிய அணிகலன்களைத் தரித்தவரும், இளஞ்சூரியனைப் போல் ஒளிருபவரும், ஜ்வலிக்கின்ற கிரீடத்தை அணிந்தவரும். எவ்வித மாறுபாடும் அற்றவரும், துளஸி மாலையை அணிந்தவரும் சங்கம் சக்ரம், கதை, தாமரை, பீதாம்பரம் ஆகியவற்றைத் தரித்தவருமான திருமாலைத் தனது ஆயிரங்கண்களால் கண்டு பரபரப்புடன் தண்டாங்க நமஸ்காரத்தைப் பலமுறை புரியலாயிற்று.

பிறகு ஆதிசேஷன், ''ஆயிரம் கண்கள், தலைகள், கைகள், பெயர்கள் கால்கள், லீலைகள் உடையவருமான உமக்கு எமது வணக்கம். ஆயிரம்

உருவங்கள், ஆயிரம் மடங்கு பிரகாசம், ஆயிரம் விற்கள், செயல்கள், காதுகள் ஆகியவற்றைப் பெற்றவரும், ஆயிரம் வேதத்தின் சாகைகளால் தோத்தரிக்கப் பெறுபவருமான உமக்கு எமது வணக்கம். அநேகம் குணங்களைக் கொண்டவரும், பிரம்மாவால் துதிக்கப் பெற்றவரும், நாதரூபியாகவும், உலகத்தையே நிலையாகக் கொண்டவரும், நாதத்தின் ஆத்மாவாய்த் திகழ்பவரும், நரக மாகிற கடலில் துன்புறுபவர்களைக் கரை சேர்ப்பவரும், நாராயணரும், புருஷரும், பரமபதத்தில் வீற்றிருப்பவருமான திருமாலுக்கு எமது வணக்கம். காலரூபியும், காலத்திற்கே காலன் போன்றவரும், கலியுக தோஷங்களைப் போக்கடிப்பவரும், காமியானவரும், காமத்தைத் தோற்றுவிப்பவரும், கவிகளுக்கும் (கபிகளுக்கும்) நாயகரும், காமாவதாரமாகவே (பலராமனாகத்) தோன்றியவரும் பரம்பொருளுமான திருமாலுக்கு எமது வணக்கம். பத்மாவான லக்ஷ்மிதேவிக்கு ஆலயம் போன்றவரும், பராத்பரரும், பத்மாஸனரும், பாபங்களாகிற விறகை எரிக்கும் அக்னி போன்றவரும், பக்தர்களுக்கு மோக்ஷத்தை அருள்பவரும், பவஸம்ஸாரத்திலிருந்து விடுபடச் செய்பவரும், பக்தர்களிடம் அன்பு பூண்டவரும், கமலத்தில் தோன்றிய நான்முகனுக்கு தந்தையானவரும், அந்தரங்கமாக ஒவ்வொருவருடைய மனதில் எழுந்தருளியிருப்பவரும், முனிவர்களுக்கு ஈச்வரரும், பாகீரதியாகிற கங்கை நீரால் அடிவருடப்பெற்றவரும் யோகவடிவானவரும், யோகிகளால் அறியப்படுபவரும், சிறந்த யோகிகளின் இருதயத்தில் வசிப்பவரும், யோகாசனரும், மநமாகிற யோகத்திற்கு பயங்கரரும், வரமளிப்பவருமான பரஞ்சோதிக்கு வணக்கம். வேதாந்தத்தால் சுட்டப்படுபவரும், நிஷ்கல விக்ரஹமானவரும், வேதவேதாங்கங்களால் அறியப்படுபவரும், தூய்மையானவரும், நம்மால் எண்ணிப்பார்க்க முடியாத பெருமைபடைத்தவரும், வேதியர்களின் பிரியரும் எளியருமான திருமாலுக்கு வணக்கம்'' என்றவாறு துதிசெய்து ஆத்யந்தம் இல்லாதவரும், விஸ்வரூபியுமான மஹாவிஷ்ணுவை பூமியில் விழுந்து, தனது மனோரதம் போல் வணங்கி மகிழ்ந்தது. அதைக் கண்ட பகவான்,

